### என்னைப் பாராட்டிய அனைவருக்கும் நன்றி!

# அவையில் நான் பெற்ற அனுபவங்கள் எனக்கு உறுதுணையாக இருக்கும்!

## மாநிலங்களவையில் என்.ஆர்.இளங்கோ – பிரியா விடையில் நெகிழ்ச்சி உரை!

**புதுடெல்லி, மார்ச் 21– மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பிரியா விடை உரையில் என்னை பாராட்டிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தும், அவையில் நான் பெற்ற அனுபவங்கள் எனக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.**

இது குறித்து மாநிலங்களவை உறுப்பினர், கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பிரியா விடை உரை வருமாறு:-

ஒரு சாதாரண பின்புலத்தில் இருந்து இந்த மாபெரும் அவைக்கு என்னை தேர்ந்து எடுத்து அனுப்பிய, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் வழியனுப்பும் விதமாக எங்களை வாழ்த்தி பேசிய பிரதமர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் எல்லாம் பேசியது போல எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை கிடைத்தது. மூன்று துணை ஜனாதிபதிகளிடம், அவை தலைவர்களிடம் பணியாற்ற கூடிய ஒரு நல்ல வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. வெங்கையா நாயுடு, ஜெகதீஷ் தன்கர், மற்றும் உங்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மூத்த சகோதரராக வழிநடத்திய திருச்சி சிவா அவர்களுக்கு நன்றி!**

துணை தலைவராக பணியாற்றிய ஹார்வன்ஷ் அவர்கள் எங்களை வழி நடத்தியதோடு அல்லாமல் உரிய வாய்ப்புகளை கொடுத்தார் அது எங்களுக்கு மிகவும் துணையாக இருந்தது, எங்களுடைய குழு தலைவர் திருச்சி சிவா அவர்களை பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். அவரை குழு தலைவர் என்று சொல்வதை விட, அவர் எங்களை ஒரு குடும்ப தலைவராக தான் நடத்தினர், ஒரு மூத்த சகோதரனாய் எப்படி அவையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை எங்களுக்கு சொல்லிக்கொடுத்து ஒரு மூத்த சகோதரன் ஒரு குழந்தையை கைபிடித்து கொண்டு கொண்டுசெல்வது போல் எங்களை வழிநடத்தினார். அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மூத்த தலைவர்கள் மல்லிகா அர்ஜுனன் கார்கே, கபில் சிபல், பி.சிதம்பரம், திக் விஜயசிங் ஆகியோருக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அமைச்சரவையில் இருக்கக் கூடிய ஜே.பி.நட்டா அவர்களும் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களும் அவையில் எங்களுக்கு பதில் சொல்லும் போதும் கூட எங்களை மிகவும் கண்டித்து பேசினாலும் கூட, அவைக்கு வெளியே இருக்கக் கூடிய நடவடிக்கைகளில் எங்களுக்கு மிக துணையாக இருந்தார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். மிக குறிப்பாக உள்துறை அமைச்சர் அவர்கள் மூன்று குற்றவியல் சட்டங்களை நான் கொடுத்த பங்களிப்பை என்னை தனிப்பட்ட முறையில் அழைத்து பாராட்டியதற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் தோழர்கள் ஜான் பிரிட்டாஸ், சந்தோஷ் குமார், சிவதாஸ் அவர்கள் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் மனோஜா சஸ்மிட் பத்ரா, நீரஜ் சந்திரசேகர் மற்றும் ஆம் ஆத்மி பாராட்டியை சேர்ந்த தோழர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். டெரிக் ஓபிரியன் எங்கு பார்த்தாலும் எங்களை அரவணைத்து எங்களை ஊக்கப்படுத்தி எப்படியெல்லாம் அவையில் ஆக்ரோஷமாகவும் பேசவேண்டும் என்பதனை சொல்லிக்கொடுத்தவர் அவர்.

**அவை அனுபவங்கள் என் பொது வாழ்விற்கு அடித்தளம்!**

நான் 2020 ல் தேர்ந்து எடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்த போது கூட பல்வேறு காரணங்களால் கொரோனா தொற்று, மற்றும் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை



யில் நடைபெற்ற சில நிகழ்வுகளால் என்னால் இந்த அவையில் முழுமையான பங்களிப்பினை தரமுடியவில்லை, நான் இந்த அவைக்கு ஆற்றிய பங்கு மிக சிறிதாக இருந்தாலும் கூட, நான் இந்த அவையில் மூத்தவர்களிடம் இருந்து பெற்று இருக்கக்கூடிய அனுபவமும் பாடமும் மிகவும் பெரியது, விலைமதிப்பற்றது. அது என்னுடைய இனி வரும் காலங்களில் பொது வாழ்வில் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன், எல்லா திராவிட முன்னேற்ற கழகத் தோழர்களுக்கும் ஐந்து பெரும் முழக்கம் உண்டு. அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கம் அற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், இந்தி திணிப்பை என்றும் எதிர்போம், வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற இந்த ஐந்து பெரும் முழக்கங்களை ஒட்டி என்னுடைய பொது வாழ்வு தொடங்கும், தொடரும் அதற்கு இந்த அவையில் நான் பெற்ற அனுபவங்கள் எனக்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பாக என்னுடைய கருத்துக்களாக இரண்டு விஷயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன், கலைஞர் அவர்கள் நாடாளுமன்ற முறையை பற்றி பேசும்போது பெரும்பான்மை என்பது உடலை போலவும் சிறுபான்மை என்பது கண்களை போலவும் மதிக்கப்படவேண்டும் என்று சொன்னார்.

**சிறுபான்மையினருக்கு தகுந்த மதிப்பளிக்க வேண்டும்!**

அதாவது பெரும்பான்மையினர் ஆக இருக்கக்கூடியவர்கள் சிறுபான்மையினர் உடைய கண்களின் வழியாக அவர்களின் வழியாக பிரச்சனைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார். அந்த நடைமுறை இப்போது எல்லாம் நடப்பது இல்லை என்பது என்னால் அறியமுடிகிறது, இந்த 6 வருடங்களில் நான் அதை பார்த்திருக்கிறேன், எனவே சிறுபான்மையினர் கருத்துகளுக்கு உரிய மரியாதையை கொடுக்கவேண்டும். அந்த கருத்துக்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்,

இரண்டாவது ஆக பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னபோது வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று சொன்னார், இத்தனை கால இடைவெளியில் இந்த 10 ஆண்டுகளில் இந்த நிலைமை மாறியிருக்க வேண்டும் ஆனால் மாறவில்லை அதைவிட வடக்கு வாழ்கிறது தெற்கை வதைக்கிறது என்ற அளவில் இன்று நாம் நிற்கிறோம் வரக்கூடிய காலங்களில் இந்த சூழ்நிலை மாறவேண்டும் அதற்கு இந்த அவை துணைநிற்க வேண்டும்,இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியான கண்ணோட்டத்துடன், பொருளாதாரத்திலும் மற்ற எல்லா செய்திகளிலும் இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக பார்க்கவேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.” எனத் தனது உரையை ஆற்றி முடித்தார்.

அதன் பின்னர் பேசிய உறுப்பினர்கள் பலர் இளங்கோ அவர்களின் ஆறாண்டு காலப் பணியைப் பாராட்டிப் பேசினர். திமுகவின் மாநிலங்களவைக் குழுவின் தலைவரான திருச்சி சிவா பேசும்போது “என் ஆர் இளங்கோ மற்றும் டாக்டர் கனிமொழி சோமு ஆகிய என்னுடைய இரு நம்பிக்கைக்குரிய உறுப்பினர்கள் இந்த அவையில் தங்கள் பதவிக்காலத்தை ஏப்ரல் 2 ஆம் தேதி முடிக்கிறார்கள். அவர்கள் இருவரும் இந்த அவையில் சிறப்பாகப் பங்காற்றினார்கள். நான் தனிப்பட்ட முறையில் அவர்கள் இருவரின் இன்மையையும் உணர்வேன். அவர்கள் இருவரும் கட்சியின் கொள்கைப் பிடிப்போடு இந்த அவையின் மாண்பைக் கடைபிடித்தவர்கள். இந்த அவையில் எனது பணிக்கு அவர்கள் இருவரும் எனக்கு உற்ற துணையாக இருந்தார்கள். மூன்று குற்றவியல் சட்டங்கள் அமல்படுத்தப்பட்ட போது, அதில் இளங்கோ அவர்கள் அளித்தப் பங்களிப்புக்காக நமது உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களாலேயேப் பாராட்டப்பட்டு நன்றி தெரிவிக்கப்பட்டார். அவர் எங்கள் கட்சியின் மதிப்புமிக்க உறுப்பினர்களில் ஒருவர்.” எனப் பேசினார்.

பிஜு ஜனதா தளக் கட்சியின் உறுப்பினரான சஸ்மித் பத்ரா பேசும்போது “திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களில் ஒருவரான ‘என்.ஆர். இளங்கோ அவர்களுக்கு இந்திய சட்டங்களில் ஆழமானப் புரிதல் உள்ளது.” எனப் பாராட்டினார்.

திர்ணாமூல் காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினரான டெரிக் ஓ பிரையன் தனது உரையில் இளங்கோ அவர்களின் சட்டப் புலமையைப் பாராட்டினார். அவரது பேச்சில் “நமது அவையில் வெவ்வேறுக் கட்சிகளில் இருந்து இளம் உறுப்பினர்கள் இடம் பெற்று பங்காற்றியுள்ளார்கள். வெளியே பெரிதாக அறியப்படாத ஒருவரோடு பணியாற்றியது எனக்கு மகிழ்ச்சியான அனுபவம். அவர் தொலைக்காட்சி விவாதங்களில் இடம் பெற மாட்டார். கேமராக்கள் முன்னால் அவரைப் பார்க்க முடியாது. அவர் எங்கள் கட்சியான திருணாமூல் காங்கிரஸ் கிடையாது. அவர் திமுக வைச் சேர்ந்த என் ஆர் இளங்கோ. அவருக்குக் குற்றவியல் சட்டங்களில் ஆழமான அறிவுள்ளது. அவர் மிகவும் செயல்திறன் மிக்க உறுப்பினர்.” என சிலாகித்தார்.

சிபிஐ (எம்) கட்சியின் உறுப்பினரான ஜான் பிரிட்டாஸ் தனது உரையில் என் ஆர் இளங்கோ அவர்களின் சட்ட நிபுணத்துவத்தை சிலாகித்துப் பேசும் போது அவரை “legal eagle” என்று பாராட்டினார்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ அவர்களின் சிறப்பான செயல்பாடு குறித்து மாநிலங்களவை உறுப்பினர்கள் தமது கருத்துகளை பதிவு செய்தனர்.

---

அங்கன்வாடி சகோதரிகளுக்கு அலுவலகப் பணிகளுக்காக வழங்கப்பட இருந்த மொபைல் போன்களை

# அவதூறுப் புகார் அளித்து தடுத்து நிறுத்திய அ.தி.மு.க. எம்.பி. இன்பதுரை!

## தமிழ்நாடு அங்கன்வாடிப் பணியாளர் – உதவியாளர்கள் முன்னேற்ற சங்கம் கண்டனம்!

சென்னை, மார்ச். 21- தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் - உதவியாளர்கள் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் வி. வேலுசுவாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அங்கன்வாடி சகோதரிகள் அவர்களது அன்றாட பணிகளுக்காக மொபைல் போன்களில் உள்ள செயலியையே பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதில் ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள போஷன் டிராக்கர் செயலியில் தினமும், தங்கள் மையத்தில் பராமரிக்கும் குழந்தைகளின் வருகைப்பதிவு எடை, உயரம், அவர்களுக்கு வழங்குகின்ற முட்டை, சத்து மாவு பாக்கெட்டுகளின் விபரம், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், அப்பகுதியில் பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளின் விபரங்கள் மற்றும் வீடுகள் பார்வையிடல் உள்ளிட்ட பல்வேறு தரவுகளை பதிவேற்றம் செய்து வருகின்றனர். அதிலும் தற்போது முக அங்கீகாரம் (FRS) மூலம் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்குவதற்கு இச்செயலி சரியாக செயல்படாததால் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த அதிமுக ஆட்சியில் 2018ல் வழங்கப்பட்ட தரம் குறைந்த செல் போன்கள், சீக்கிரமே செயலிழந்து போன நிலையில், சகோதரிகள் தங்களது சொந்த செலவில் செல்போன்களை வாங்கி அலுவலக பணிகளை செய்து வந்த அவலத்தை போக்கும் வகையில் நமது சங்கம் எடுத்த பெரு முயற்சியின் பலனாக 2024ல் 18756 சகோதரிகளுக்கு புதியதாக ஆண்ட்ராய்டு போன்கள் வழங்கப்பட்டன!

ஆனாலும், மீதமுள்ள 29000 சகோதரிகளுக்கு ஆண்ட்ராய்டு போன்களை விரைந்து வழங்கிட வேண்டுமென்று தொடர்ந்து நமது சங்கம் வலியுறுத்தி வந்த நிலையில் ஐ.சி.டி.எஸ் நிர்வாகம் “ஹரியானா ஸ்டேட் எலக்ட்ரானிக் டெவெலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்” என்ற நிறுவனத்திற்கு 11800/- ரூபாய் விலை மதிப்புள்ள 29 ஆயிரத்து 236 ஆண்ட்ராய்டு போன்களை வழங்குவதற்கு டெண்டர்கள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில் புதிய ஆண்ட்ராய்டு செல்போன்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவைகளின் அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையானது, குழந்தைகளின் சேவைகளில் ஈடுபடும் அங்கன்வாடி சகோதரிகளின் அத்தியாவசியப் பணிகள் தடைப்பட்டு விடக் கூடாது என்ற நோக்கில் அரசு செய்து வரும் தொடர் நடவடிக்கை என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அங்கன்வாடி சகோதரிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செல்போன்களை பரிசாக வழங்குவது போல சித்தரித்து, அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் இன்பதுரை எம்.பி அவர்கள் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் சேலம் மாவட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி சகோதரிகளுக்கு வழங்கப்பட இருந்த 2696 மொபைல் போன்கள் வழங்குவதை முடக்கி, ஆட்சியர் அலுவலகத்தில் வைத்துள்ள செய்தி அங்கன்வாடி சகோதரிகளை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

அதிமுக ஆட்சி காலத்தில் அங்கன்வாடி சகோதரிகளின் நலன்களுக்கு எந்த வித கோரிக்கைகளையுமே காதில் வாங்க மறுத்ததோடு, அண்மையில் திமுக அரசு அங்கன்வாடி சகோதரிகளுக்காக பல்வேறு புதிய சலுகைகளை அறிவித்து அங்கன்வாடி சகோதரிகளின் மனதில் இடம் பிடித்ததை பொறுத்துக் கொள்ளாமல் அதிமுகவினர் சிலரை தூண்டிவிட்டு 16 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்ற போது அங்கன்வாடி சகோதரிகளின் மீது அக்கறை இருப்பது போல் நாடகமாடியது, இன்பதுரை எம்.பி.யின் செயல் மூலம் அதிமுகவினர் தொழிலாளர் விரோத நடவடிக்கை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

“அதிமுகவினரால் உபகாரம் இல்லையென்றாலும் பரவாயில்லை ! உபத்திரவம் இல்லாமல் இருந்தால் போதும் என்றே நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

அதிமுகவின் இந்த செயல் “குதிரை குப்புறத் தள்ளியதோடு குழியும் தோண்டி விட்டதே” என்ற முதுமொழியை நமக்கு நினைவுப்படுத்துகிறது.

அங்கன்வாடி சகோதரிகளின் கவலைகளை புரிந்து கொள்ளாமல் அவர்களின் பணிச்சுமையை அதிகரிக்கும் வகையில் செல்போன்களை, தனது அவதூறு புகாரின் மூலம் தடுத்துள்ள அதிமுக எம்.பி. இன்பதுரை அவர்களை நமது சங்கத்தின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம். அங்கன்வாடி சகோதரிகள் வரும் சட்டமன்றத் தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# தி.மு.க. கூட்டணிக்கு - பூலித்தேவன் மக்கள் கழகம் ஆதரவு!

## எஸ்.பெருமாள்சாமி அறிக்கை!

தென்காசி, மார்ச் 21- தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவளித்து பூலித்தேவன் மக்கள் கழகம் ஆதரவு தெரிவித்து அதன் நிறுவனத் தலைவர் எஸ்.பெருமாள்சாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தேவர் சமூக மக்களுக்கு பாதுகாப்பாகவும் அரணாகவும் இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதன் காரணமாகவே சுமார் 25 ஆண்டுகாலமாக 1/4 நூற்றாண்டு கடந்து எங்களின் நிபந்தனையற்ற ஆதரவை தெரிவிக்கிறோம்.

முத்தமிழர் தேவர் சமுதாயம் மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மக்களை இணைத்து தனி இட ஒதுக்கீடு வழங்கி கல்வி, வேலை வாய்ப்பு. பொருளாதாரம் இவை அனைத்தையும் செய்து கொடுத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சீர்மரபினருக்கு தனி வாரியம் (சீர்மரபினர் நல வாரியம்) அதன் மூலம் கல்வி, பொருளாதாரம் அனைத்திற்கும் வழி வகுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தேவர் சமுதாய மக்கள் பயன் அடைந்திட வழி வகுத்தவர் கலைஞர்/இன்றும் பசுபொன் மண்ணில் தேவர் பெருமகனாருக்கு நினைவாலயம், அணையா விளக்கு அமைத்து அழகு பார்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேவர் பெருமகனார் பெயரில் முத்தான மூன்று அரசு கலை அறிவியல் கல்லூரியை அமைத்து. இன்று கோடிக்கணக்கான மாணவர்கள் பட்டம் பெற வழி வகுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்/ முதல் சுதந்திர போராட்ட மாமன்னர் பூலித்தேவன் பிறந்த மண்ணில் அவருக்கு விண்ணுயர வெண்கல சிலையும் மணிமண்டபமும் கட்டி அழகு பார்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

சங்கரன்கோவிலில் பூலித்தேவன் வாழ்கை வரலாறு அமைத்தவர் கலைஞர் அவர்கள். இன்னும் எண்ணில் அடங்க சாதனையை செய்து கொடுத்து இருக்கிறார். தமிழ் நாட்டில் முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டுமே தேவர் சமுதாயத்திற்கு அரணாகவும் பாதுகாப்பாகவும் இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டுமே ஆகவே இந்த ஆண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் எங்களின் பூலித்தேவன் மக்கள் கழகம் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகிறோம். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளில் திராவிட முன்னேற்ற கழக கூட்டணி 210 தொகுதிகளுக்கு மேல் மகத்தான வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்/ அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று (20.3.2026) பண்ருட்டி நகர கழக அலுவலகத்தில் நடைப்பெற்றது.அமைச்சர் சி .வெ. கணேசன் ஆலோசனைகள் வழங்கினார். மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். தொகுதி பொறுப்பாளர் செ. புஷ்பராஜ், நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம், அண்ணா கிராம ஒன்றிய கழக செயலாளர் வெங்கட்ராமன், ,மாவட்ட துணை செயலாளர் ஆனந்தி சரவணன், நெல்லிக்குப்பம் நகர கழக செயலாளர் மணிவண்ணன், ஒன்றிய பொறுப்பாளர் ராமு, ராமச்சந்திரன், தொரப்பாடி பேரூர் கழக செயலாளர் சுந்தர வடிவேலு, பட்டாம் பாக்கம் பேரூர் கழக செயலாளர் ஜெயமுர்த்தி ,பண்ருட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்தோஷ் குமார் ,பொதுக்குழு உறுப்பினர் பலராமன் ,நகர அவைத்தலைவர் ராஜா ,நகர பொருளாளர் ராமலிங்கம் ,மாவட்ட வழக்கறிஞர் துணை அமைப்பாளர் பரணிச்சந்தர் ,நகர துணை செயலாளர் சீனிவாசன் ,பண்ருட்டி சட்டமன்ற தொகுதி தகவல் மற்றும் ஒருங்கிணைப்பாளர் நாராயணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# ஜனநாயகத்தின் பல பரிணாமங்களைப் பார்க்கும் வாய்ப்பை வழங்கியது மாநிலங்களவை!

## பிரியாவிடை நிகழ்வில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேச்சு!

புதுடெல்லி, மார்ச்.21– தி.மு,.க. மாநிலங்களவை உறுப்பினராக உள்ள டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின் பதவிக் காலம் முடிவடைவதை யொட்டி, மாநிலங்களவையில் நடந்த பிரிவு உபசார நிகழ்வில், நன்றி தெரிவித்து அவர் பேசியதாவது:–

என்னைப் பேச அழைக்கும் முன்பாக மறைந்த எனது தந்தை என்.வி.என். சோமு பற்றிய நினைவுகளைப் பகிர்ந்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

என்னை இந்த உலகிற்கு அறிமுகம் செய்தவர்கள் எனது தந்தை என்.வி.என். சோமு மற்றும் தாய் உமாதேவி ஆகியோர் என்றால், அரசியல் உலகிற்கு என்னை அழைத்துவந்து அறிமுக செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

எனது தலைவரும் வழிகாட்டியுமான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்தான், பெண்களின் குரலை ஒலிக்கச் செய்யும் விதமாக என்னை இந்த அவைக்கு அனுப்பி வைத்தவர். இவர்கள் அனைவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், எனது தாத்தா என். வி.நடராசனும் போற்றி வளர்த்த, எனது ரத்தத்திலும் மூச்சிலும் கலந்துள்ள திராவிடப் பாரம்பரியத்திலிருந்து வந்தவள் நான் என்பதில் பெருமை கொள்கிறேன்.

என்னை இங்கு முழு உத்வேகத்துடன் செயல்பட பெரும் உந்து சக்தியாக இருந்தவர், மாநிலங்களவையில் எங்கள் கட்சியின் அவைத் தலைவராக உள்ள திருச்சி சிவா அவர்கள்தான். என்னைப் போன்ற புதுமுக எம்.பி. க்களுக்கு அவர் விரும்பி முன் வந்து பேச அளித்த வாய்ப்புகளை நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். மற்ற கட்சி உறுப்பினர்களுடன் எந்தளவுக்கு சகஜமாகப் பழகவேண்டும் என்பதற்கு அவர் மிகச் சிறந்த உதாரணம்.

**அற்புதத் தருணம்!**

இந்த அவைக்கு நான் வந்த போது வெறும் கையுடன்தான் வந்தேன். இப்போது மறக்க முடியாத, பெருமைப்படத்தக்க சிறந்த நினைவுகளோடு விடை பெறுகிறேன். பொதுவாழ்க்கையில் ஆகச் சிறந்த ஆளுமைகளாக இருக்கும் பலருடன் நான் இந்த அவையைப் பகிர்ந்துகொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பல பரிணாமங்களை நான் பார்ப்பதற்கும் அனுபவிப்பதற்கும் ஓர் அற்புதத் தருணமாக எனது பதவிக் காலம் இருந்ததை என்னால் மறக்க முடியாது.

2021, செப்டம்பர் 27ம் தேதி பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நான் பதவியேற்ற முதல் நாளில் இருந்து இந்த நாள் வரையிலான 54 மாதங்களில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிகழ்வும் அற்புதமானவை. மனதுக்கு நெகிழ்ச்சியானவை. இந்த 1540 நாட்களில் இந்த அவையின் தலைவர்களாக இருந்த வெங்கைய நாயுடு, ஜெகதீப் தங்கர் மற்



றும் தற்போதைய தலைவரான சி.பி.ராதாகிருஷ்ணன் என மூன்று துணை ஜனாதிபதிகளோடு பழகும் வாய்ப்பையும் அவர்களின் அரசியல் அனுபவத்தை அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பையும் பெற்றேன்.

நகைச்சுவையும் பரிவும் கலந்து உறுப்பினர்களை அணுகிய வெங்கைய நாயுடு, சிரித்த முகத்தையும் கண்டிப்பான வார்த்தைகளையும் வெளிப்படுத்தும் ஜெகதீப் தங்கர் ஆகியோரின் பதவிக்கால நாட்களை அவ்வளவு எளிதில் மறக்க இயலாது. தமிழ் நாட்டு உரிமைகள், தமிழக மக்களின் பிரச்னைகள் பற்றிப் பேச வாய்ப்புக் கேட்கும்போதெல்லாம் மறுக்காமல் அனுமதி தந்த இந்த மூவரையும் நன்றியோடு பார்க்கிறேன்.

சுதந்திரமாகப் பேச அனுமதித்த அதே நேரத்தில், குறிப்பிட்ட விஷயத்தைத் தாண்டி பேச முற்பட்டால் கண்டிப்போடு தடுத்து, நல்வழிகாட்டிய மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் அவர்களுக்கும் எனது நன்றிகள். கட்சி எல்லைகளைக் கடந்து மூத்த உறுப்பினர்கள் பலரும் இளைய மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு உற்சாகமூட்டி, ஆதரவளித்ததை நன்றியோடும் ஆச்சரியத்தோடும் நினைத்துப் பார்க்கிறேன்.

தெளிவாக ஆணித்தரமாகப் பேசும் மல்லிகார்ஜுன கார்கே, துல்லியமான கூர்மையான உரை நிகழ்த்தும் ப.சிதம்பரம், சிந்தனையைத் தூண்டும் உரை நிகழ்த்தும் ஜான் பிரிட்டாஸ், உணர்ச்சிமயமான பேச்சுக்கு சொந்தக்காரரான டெரிக் ஓ பிரைன், மென்மையாக அதேநேரத்தில் சக்திவாய்ந்த உரை நிகழ்த்தும் பிரியங்கா சதுர்வேதி, மனோஜ் ஜா, ஜெயா பச்சன், ராம்கோபால் வர்மா, சஸ்மித் பத்ரா உள்ளிட்ட பலரையும் மகிழ்ச்சியோடு எண்ணிப்பார்க்கிறேன்.

தேசப் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை விவாதிக்கும் போது அதை ஆதரித்தும் எதிர்த்தும்; அல்லது இரு வேறு விதமாக வரும் கருத்துக்களுக்கு சமமான வாய்ப்பும் மதிப்பும் அளிப்பதுதான் ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு நல்லது. அது இங்கே நிறையவே இருக்கிறது. அரசமைப்புச் சமநிலையை தக்கவைக்கும் ஒரு நிறுவனமாக, அறிவுக் கோவிலாக மாநிலங்களவை விளங்குகிறது.

முழுமையான விவாதங்கள், அவசியமான உரைகள், பரஸ்பர வாதங்கள் ஆகியவையே ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்கள். அதேபோல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவையே எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடு. இந்த இரண்டையும் சம அளவில் என்னால் கடைபிடிக்க முடிந்தது. அவற்றுக்கு என்னுடைய பங்களிப்பையும் அளிக்க முடிந்தது.

என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கும், பொது அறிவுக்கும் பலம் சேர்க்கும் அளவுக்கு நல்ல பாடங்களை எனக்கு கற்றுக்கொடுத்த அனைத்துக் கட்சி எம். பி.க்களுக்கும் என்னுடைய நன்றிகள்.

கொள்கை மாறுபாடுகளை ஒதுக்கிவிட்டு புன்னகை முகத்தோடு என்னை ஒரு சகோதரியாக அணுகிய அனைத்துப் பெண் எம்.பி.க்களுக்கும் எனது நன்றிகள். எங்களை அன்போடும் கண்ணியத்தோடும் நடத்திய அவைக் காவலர்கள், மாநிலங்களவைச் செயலக அலுவலர்கள், பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் அயராத உழைப்பையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

எனது மாநில மக்களின் நலனுக்கும், இந்த நாட்டின் நலனுக்கும் என்னாலான சிறு பங்களிப்பை எனது பதவிக் காலத்தில் நான் வழங்கியதாக நம்புகிறேன். அந்த வகையில் எனது பதவிக் காலம் அர்த்தமுள்ளதாகவே இருந்தது.

எதிர்காலத்திலும் இதே கண்ணியம் மற்றும் பொறுப்புணர்வோடு இந்த அவை இயங்க வேண்டும் என்று வாழ்த்தி, இந்த அவைக்கு மரியாதை செலுத்தி விடைபெறுகிறேன், நன்றி!

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.